Registered as a News Paper at Sri Lanka  சஞ்சிகை 54  விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

ஓலம் 02  பெப்ரவரி  (26 02 1991)  செவ்வாய்க்கிழமை  ஓசை 08

## தொற்று நோய்களினால் ஈராக்கில் 5000பேர் பலி!

(நிக்கோசியா)

வளைகுடாப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பிராந்தியங்களில் காலரா, தைபோயிட் நோய்களினால் 5000 இற்கும் மேற்பட்டோர் உயிர் இழந்துள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அறிவித்துள்ளது. நிக்கோசியாவில் இதனைத் தெரிவித்த அச்சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் நீரினால் பரவும் தொற்றுநோய்கள் இந்த மக்களைப் பெரிதும் பீடித்திருப்பதாகவும் உயிர் (4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை சீனன்குடாவில் விமானப்படைத் தளத்தில் ஊழியர்களாகப் பணிபுரிந்த 9 தமிழரைக் காணவில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள சீனன்குடா விமானப்படைத் தளத்தில் வேலைபார்த்துவந்த ஒன்பது தமிழர்கள் அண்மையில் காணாமற் போயுள்ளார்கள்.

இவர்கள் காலையில் வேலைக்குச் செல்லும்போது அல்லது மாலையில் வேலை முடிந்து வீடுதிரும்பும் போது ஒருவர்பின் ஒருவராகக் காணாமற் போயுள்ளார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு வேலை செய்துவந்த ஏனைய தமிழர்கள் வேலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டு தமது உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் இவர்கள் திட்டமிடப்பட்டுக் கடத்திச்செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கடத்தல் நடவடிக்கையானது சிறிலங்கா விமானப்படையில் பணிபுரியும் தமிழர்களை அகற்றிவிட்டுத் தனிச்சிங்களவர்களை நியமிப்பதற்கான முயற்சியே என நம்பப்படுகிறது.

### திருமலை மாவட்டத்தில்

## முஸ்லிம் ஊர்காவற்படையின் கெடுபிடி தொடர்கிறது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் தமிழ்ப் பொது மக்கள் தினமும் கைதுசெய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த பன்னிரெண்டாம் திகதி மூதூரில் மூத்தாக்குட்டி (வயது 55 9 ஆம் கட்டை) என்பவரை முஸ்லிம் சமூக விரோ...

மறுதினம் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த வயிரன் காளியப்பு (வயது 60) என்பவரைக் கைதுசெய்துள்ளனர். இதே (4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுக்கொலை

(திருக்கோணமலை)

## புலிகள் - இராணுவம் மட்டக்களப்பில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மகிழடித்தீவுக்கும் மண்முனைக்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6.00 மணியளவில் இடம்பெற்ற மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாயினும் இழப்புக்கள் பற்றிய விபரங்கள் தெரியவில்லை. இம் மோதலில் மூன்று புலிகள் வீரமரணமடைந்தனர்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட மோதலில் ஒரு அதிரடிப் படைவீரர் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 400 அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கைது

(மட்டக்களப்பு)

செய்த முகாம்களில் தடுத்து

## பரீட்சைகள் இடையூறின்றி நிகழ கல்வித் திணைக்களம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

மார்ச்மாத இறுதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையை நடாத்தச் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து க.பொ.த. உயர்தர, சாதாரணதர பரீட்சைகளையும் நடாத்தி மாணவரின் கல்வி

திணைக்களம் எல்லா விதத்திலும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துவருவதாக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்

## வீரவணக்கம்

**'நேசன்'**
**'கண்ணதாசன்'**
**'நிக்சன்'**

(மட்டக்களப்பு)

நேற்று முன்தினம் மண்முனைக்கும் மகிழடித்தீவுக்கும் இடையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் நேசன (குரையம்பதி), கண்ணதாசன் (மகிழடித்தீவு), நிக்சன் ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 6 ஆவது சார்க் கொழும்பில்!

(மாலே)

'சார்க்'இன் ஆறாவது உச்சி மாநாடு இந்த வருடம் நவம்பர்மாதம் கொழும்பில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 7ஆம் திகதி (4ஆம் பக்கம் பார்க்க)

ளார்கள்.

இவர்கள் காலையில் வேலைக்குச் செல்லும்போது அல்லது மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பும் போது ஒருவர் பின் ஒருவராகக் காணாமற் போயுள்ளார்கள் இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு வேலை செய்து வந்த ஏனைய தமிழர்கள் வேலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டு தமது உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவற் படையினராலும் இவர்கள் திட்டமிடப்பட்டுக் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கடத்தல் நடவடிக்கையானது சிறிலங்கா விமானப்படையில் பணிபுரியும் தமிழர்களை அகற்றிவிட்டுச் சிங்களவர்களை நியமிப்பதற்கான முயற்சியே என நம்பப்படுகிறது.

## திருமலை மாவட்டத்தில்

# முஸ்லிம் ஊர்காவற்படையின் கெடுபிடி தொடர்கிறது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் தமிழ்ப் பொது மக்கள் தினமும் கைதுசெய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த டன்னிரெண்டாந் திகதி மூதூரில் மூத்தார்குட்டி (வயது 55 9ஆம் கட்டை) என்பவரை முஸ்லிம் ஊர்காவற் படையினர் கைது செய்து அடித்துச் சித்திரவதை செய்த பின் அவரிடமிருந்த சைக்கிள், உடுப்புகள், ஐம்பத்தெட்டு ரூபா பணம் என்பவற்றையும் பறித்தெடுத்துள்ளனர்.

மறுதினம் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த வயிரன் காவியப்பு (வயது 60) என்பவரைக் கைதுசெய்துள்ளனர். இதே

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

மூதூரில் முஸ்லிம் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் கடந்தவெள்ளிக்கிழமை முகாமிலிருந்து வெளியேறி கடற்கரைச்சேனை என்ற பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்திய சமயத்தில் சோமலிங்கம் என்ற இளைஞரை சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

## தோப்பூரில் தனி உ. அ. அ. பிரிவு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள தோப்பூரை தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றுவதற்கு சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தோப்பூரில் முஸ்லிம் மக்கள் அதிகளவு வசித்து வருவது தெரிந்ததே. அரசின் இம்முயற்சிக்கு தமிழினப் படுகொலைக்கு சிங்களப் படைகளுடன் இணைந்து செயற்பட்டு வரும் முஸ்லிம் ஊர்காவற்படையினர் பேராதரவு வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

# மட்டக்களப்பில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மகிழடித்தீவுக்கும் பண்முனைக்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6.00 மணியளவில் இடம்பெற்ற மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டதாகவும் இழப்புகள் பற்றிய விபரங்கள் தெரியவில்லை இம் மோதலில் மூன்று புலிகள் வீரமரணமடைந்தனர்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட மோதலில் ஒரு அதிரடிப் படை வீரர் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# 400 அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தினர் தேடுதல் நடாத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கைது செய்து முகாம்களில் தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கதிரவெளிப் பகுதியை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி லூக்காஸ் (வயது 30), காசிநாதன் விஜயன் வயது 21), இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசா பொன்னம்பலம் (வயது 25). நான்கு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை இரூபா (வயது 35) இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுந்தையா தவராசா (வயது 24). மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை நாகராசா (வயது 28), இரண்டு பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் ரத்தினம் (வயது 34) ஆகியோர் உட்பட மொத்தம் 11 குடும்பஸ்தர்களை கைதுசெய்து தடுத்து வைத்துள்ளதுடன் வாகரை, கதிரவெளி, மாங்கேணி ஆகிய இடங்களில் புதிய முகாம்களையும் அமைத்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் தமிழ்க் குழுவால் இளைஞர் அடித்துக் கொலை

(செ. த. மை.)

பளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கொழும்பில் வைத்து தமிழ்க்குழு ஒன்றினால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்

கடந்த 19ஆம் திகதி செல்லப்பா ராஜன் வயது 20 என்பவர் வெளிநாடு செல்லும் நோக்கமாக கொழும்புக்குச் சென்றிருந்தார். கடந்த 21ஆம் திகதி பயங்கர ஆயுதங்களால் இவ்விளைஞரை அடித்துக் கொன்றதாக. நேரில் கண்டுகொண்ட ஒருவர், இளைஞரின் பெற்றோருக்கு தெரிவித்துள்ளார். இறந்தவரின் சடலம் கொழும்பில் அவரது உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிணற்றில் அழுகியநிலையில் வயோதிப மாதுவின் சடலம்

(செ. த. மை.)

கிணற்றுக்குள்ளிருந்து குடும்பப் பெண்ணொருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது இவரிடமிருந்து 450 ரூபா ரொக்கப் பணமும், தங்கச்சங்கிலி, இருதோடுகள், மூக்குத்தி ஆகியனவும் பெறப்பட்டுள்ளன.

நேற்று பிற்பகல் இருபாலை இழக்கு, இருபாலை வீதியிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது இந்தச்சடலம் மீட்கப்பட்டபொழுது மேற்குறிப்பிட்ட ரொக்கப்பணமும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

# நீதிவிசாரணை அறிக்கையை சந்திரசேகர் வெளியிட மறுப்பு

(டில்லி)

அமைச்சர்களினதும், உயர் அதிகாரிகளினதும் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டது தொடர்பான நீதி விசாரணைக் குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க சந்திரசேகர் மறுத்துவிட்டார்.

முன்னாள் பிரதமர் வி.பி. சிங் இவ்வாறு ஒட்டுக் கேட்டதாக சந்திரசேகர் முன்னர் அறிவித்துவந்த வேளையிலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ... சார்க் கொழும்பில்!

(மாலே)

'சார்க்'இன் ஆறாவது உச்சி மாநாடு இந்த வருடம் நவம்பர்மாதம் கொழும்பில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 7ஆம் திகதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சைகள் இடையூறின்றி நிகழ கல்வித்திணைக்களம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

மார்ச்மாத இறுதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையை நடாத்தச் சகல ஏற்பாடுகளும் எடுக்கப்படுகின்றன அதனைத் தொடர்ந்து க.பொ.த. உயர்தர, சாதாரணதர பரீட்சைகளையும் நடாத்தி மாணவரின் கல்வி எதுவித இடையூறுகளுமின்றி தொடர்வதற்கு கல்வித் திணைக்களம் எல்லா விதத்திலும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துவருவதாக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் பரீட்சைகளுக்கு தயார் படுத்தும் நோக்கில் பெற்றோர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் அகதிகளுக்கு நிவாரணம் திடீரென நிறுத்தம்

(செல்லிப்பனை)

பருத்தித்துறை முனைப் பகுதியில் அகதிகளாகத் தங்கியுள்ள வலிவடக்கு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக உதவி அரச அதிபரிடம் வினாவிய போது வீடுகளில் தங்கியிருப்பதால் நிவாரணம் வழங்கமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் உள்ள அகதிமுகாமில் தங்க போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலேயே அயலிலுள்ள வீடுகளில் கூட்டுக் குடும்பங்களாகத் தங்கவைக்கப்பட்டோம். வீடுவாசல், சொத்து, தொழில் ஆகியவற்றை இழந்து வருமானம் இன்றி பிற ஊரில் தங்கியுள்ள எங்களுக்கு தொடர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பங்களாதேஷ் தேர்தலை கண்காணிக்க 'சார்க்' குழு

(மாலே)

பங்களாதேஷில் நாளை நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க 'சார்க்' அமைப்பில் இருந்து 38 பிரதிநிதிகள் பங்களாதேஷ் சென்றுள்ளனர்.

இந்தியாவில் இருந்து எட்டுப் பிரதிநிதிகளும், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் இலங்கையிலிருந்து 30 பேரும் பங்களாதேஷிற்குச் சென்றுள்ளனர்;

இவர்கள் அங்கு சென்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணித்து அறிக்கை ஒன்றினை 'சார்க்' அமைப்பிற்கு சமர்ப்பிப்பார்கள் என மாலைதீவு அறிவித்துள்ளது.

# தமிழ்நாட்டு சட்டசபைக்கு உடன் தேர்தல் வேண்டும்

(டெல்லி)

தமிழ்நாடு சட்டசபைக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென ஜோக்சபை உறுப்பினரும், முன்னாள் மத்திய உள்துறை இணை அமைச்சருமான ப. சிதம்பரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

= சிதம்பரம்

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவி வருவதாகச் சொல்லப்படும் பிரிவினைச் செயல் குறித்து உயர்மட்ட விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

மஹாகவியின் கோடை - நாடகம் விலை ரூபா 30/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை

(B-2029)

**மகோற்சவம்**

கொழும்புத்துறை கிழக்கு ஆதியம்பதி அருள் மிகு ஸ்ரீ சந்திர சேகர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் சடர்த 19 ஆம் திகதி (19-2-91) செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் ஆகம முறைப்படி நடைபெற்றுவருகின்றது. (24)


# நியதியாய்ப் போகும்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறிலங்காவின் சிவில்நிர்வாகம் இன்றும் இதே மண்ணில் இருந்திருக்குமாயின் வளர்ச்சியடைவது தமிழ்மக்கள் அல்ல. முதலாளித்துவ வர்க்கம்தான். நீதிமன்ற விவகாரங்களை எடுத்துக்கொண்டால் சட்டத்தரணிமாருக்கு காசைக் கொடுத்துவிட்டு நீ வாய் வரை வாய்ச்சொல்லை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். ஆனால் இப்ப அதொன்டும் இல்லை. இப்ப ஒரு செலவும் இல்லாமலே நியாயமான நீதியான தீர்ப்பு பொடியளிட்டத்து கிடைக்கிறது இனிமேல் எங்களை நாட்டில் அரச நீதிமன்றங்களே தேவையில்லை..."

சின்னத்தம்பி கூறிய கருத்தைச் சந்தேகமியும் ஆமோதித்துக் கொண்டான் திடீரென தெருவிலே மக்கள் பரபரப்போடு ஓடுவதைக் கண்டதும் சிவப்பிரகாசம் உஷாரடைந்தார்.

'டேய் பெடியன் இஞ்சை வாங்கோடா... ஏதோ ஹெலி பொம்மர் வந்திட்டுது போலை ?" அவர் முகத்தில் மகிழ்ச்சிக் கீற்றுகள் தென்பட்டன.

டுர்...ர்...ர்...ர்... டுர்...ர்... ர்.... டுர்...

வானிலே ஹெலி ஒன்று ஐம்பது கலிபர் மூலம் மூர்க்கத்தனமாக சன்னங்களை பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தது. மக்களோ இவற்றைக் கண்டு அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. பாதுகாப்பான இடங்களில் அவர்கள் பதுங்கிக்கொண்டார்கள் அன்றாடம் வாழ்க்கையிலே உண்பது, உறங்குவது போன்ற நியதியோடு ஐம்பது கலிபர் தாக்குதல்களையும் சமாளிப்பதில் எம்மக்கள் தங்கள் உள்ளங்களை பக்குவப்படுத்திக் கொண்டதால் பெருமளவு உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

கன்னாகம் சந்தையில் காதுகேளாத நிலையில் நாட்டாண்மைத் தொழில் புரியும் பஞ்சலிங்கம் எங்கவனே வலதுகால் தொடையின் பின்பக்கத்தில் ஒரு சிராய்ப்புக் காயத்துடன் ஓடிவந்து சிவப்பிரகாசத்தின் கடை வாசலில்பாதுகாப்பிற்காக ஏறிக்கொண்டான். அவன் காலில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கடை வாசலையும் அவனது இரத்தம் சிவப்பு மயமாய் கோலம் போடவே சிவப்பிரகாசத்திற்கு ஆத்திரம் வந்துவிட்டது

'டேய் என்ராப்பசா உதிலை இரத்தக் காயத்தோடை நிற்கிறாய்...? கடை வாசலெல்லாம் இரத்தம் ஒழுகுதல்லோ "

பஞ்சலிங்கம் எரிச்சலுடன் சிவப்பிரகாசம் பக்கம் திரும்பினான்.

"இது நான் பிறந்தமண். என்ரை இரத்தம் இந்த மண்ணிலை ஒழுகாமல் உன்ரை கொப்பன் வீட்டுக் கோடிக்குள்ளையா ஒழுகும்...?'

சிவப்பிரகாசம் வெலவெலத்துப் போனார். அவன் கூறியதைக் கேட்டு பாதுகாப்புக்காக அங்கு குழுமி நின்ற சில மக்கள் மெதுவாகச் சிரித்துக் கொண்டார்கள். காயப்பட்ட பஞ்சலிங்கத்தின் வேதனையை சிவப்பிரகாசத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. முதலாளி என்கிற அந்தஸ்து அந்தக் கணமே போய்விட்டது போல் துடிதுடிக்கப்போனார் அவர். மனதிலே எழுந்த கோபம் அனைத்தையும் ஒன்று திரட்டி எளியநாய்ப் பொறுக்கி என்ன கதைகதைக்கிறான் பார் ..? உவங்களுக்கெ லாம இயக்கம் ஒன்று இருக்குது என்ற துணிவு தானே...' என தனக்குள்ளேயே திட்டித் தீர்த்தார்.

வானத்திலே வட்டமிட்ட ஹெலியோடு இப்போது அவ்ரோ விமானமும் சேர்ந்து கொண்டது போராளிகளின் இலக்குகளை மையமாக வைத்து போடப்பட்ட குண்டுகள் அனைத்தும், குடிமக்களின் மனைகளின்மேல் விழுந்து வெடித்துச் சிதறின.

அழிவுப்படலத்தை அரைமணி நியாலமாக அரங்கேற்றிய களைப்பில், அவ்ரோ விமானம் பலாலி இராணுவ முகாமை நோக்கிச் சென்றுவிட்டது. அதற்கு பின்பு மக்கள் வெளியே சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள். சிவப்பிரகாசம் அன்று வழக்கமாக விற்கும் பொருட்களுக்கு ஐம்பது சதத்தாலும், ஒரு ரூபாவாலும் கூட்டி விற்கும் படி கந்தசாமிக்கும் சின்னத்தம்பிக்கும் கூறிவிட்டு, வியாபாரத்தில் மும்முரமாய் இருந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)


# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**G. A. Q; B. A. வகுப்புகள்**

பொருளியல்

**S. வரதராஜன் B. A (HONS.)**

**G. A. Q வினாவிடை வகுப்பு**

சனி 3-00 p. m

**B. A. முழுப்பாடத்திட்ட வகுப்பு**

சனி 2-00 p. m

**ஆரம்பம்:- 2-3-91** (B-2074)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா

# நினைவுச் சொற்பொழிவு

பசுபதிச் செட்டியார்

நினைவுச் சொற்பொழிவு

நேரம்: பி. ப. 4-00 மணி

காலம்: 28-2-1991

இடம்: குமாரசாமி மண்டபம்

யாழ்ப்பாண நகரம்: மீள் அபிவிருத்தி சில திறமுறைகள்

பேராசிரியர்

**கலாநிதி பாலசுந்தரம்பிள்ளை**

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இ. மகேந்திரன்
செயலாளர்
விழாக்குழு

க. சி. குகதாசன்
அதிபர்-தலைவர்
நூற்றாண்டு விழாச்சபை

(B/2072)


மீண்டும மலர்கின்றது!


# 207 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரவேங்கை

## கப்டன் ஜோன்சன்

(செல்வராசா பஞ்ச மனோகரன்)

வல்வெட்டித்துறை

மண்ணில்: 17-11-1970 மாவீரர்: 05-08-199

யாழ்ப்பாணம் கோட்டை தாக்குதலில் வீரமரணமெய்திய கப்டன் ஜோன்சனின் 207 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியைகளும் 27-02-1991 புதன்கிழமை காலை 7-00 மணியளவில் அன்னாரின் சகோதரி லலிதா வீட்டில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் கிரியைகளில் பங்குபற்றிக் கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

மாவீரர் ஜோன்சன் வீதி, கொத்தியால், வல்வெட்டித்துறை.

தகவல்: தந்தை ஆ. செல்வராசா (C. T. B.) தாய்மார், சகோதரர்கள்

(R-1132)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி

## பாபு

(ஐயம்பெருமாள் - ஜெயக்குமார்)

ஜனனம்: 21 - 11 - 1973

வீரமரணம்: 03 - 09 - 1990

(கோட்டை முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்தார்)

புதைகுழிகள் எழும்பும் — இங்கே
பூகம்பம் வெடிக்கும்
புதுயுகம் மலரும் — இங்கே
புலிக்கொடி பறக்கும்

(R-1129)

- குடும்பத்தினர்



# நினைவு தருகின்றோம்

## பெப்ரவரி 26

1986 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

பாலா

1987 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

லெப்டினன்ட் (ம விமலசேகர் - சாஸ்திரி கூளாவடியூவம்)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



## ஆரம்பம்:- 2-3-91 (B-2074)

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா

## நினைவுச் சொற்பொழிவு

பசுபதிச் செட்டியார்
நினைவுச் சொற்பொழிவு

நேரம்: பி. ப. 4-00 மணி
காலம்: 28-2-1991
இடம்: குமாரசாமி மண்டபம்

யாழ்ப்பாண நகரம்: மீள் அபிவிருத்தி
சில திறமுறைகள்

பேராசிரியர்
**கலாநிதி பாலசுந்தரம்பிள்ளை**
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இ. மகேந்திரன் — செயலாளர், விழாக்குழு
க. சி. குகதாசன் — அதிபர்-தலைவர், நூற்றாண்டு விழாச்சபை

(B/2072)

---

மீண்டும மலர்கின்றது!

## இந்து
(THE HINDU)

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வெளியிட்ட சஞ்சிகை — மீண்டும் வெளியிடப்படுகின்றது)

★ பழைய மாணவர்களே! தயவுசெய்து உங்களைப் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பி உதவுக. ஒவ்வொரு பழைய மாணவனும் தன்னைப் பற்றிய விபரங்களைத் தானே எமக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம். பெயர், முகவரி, தொழில், விசேட தகைமைகள் பற்றி எழுதவும். தயவுசெய்து 20-03-1991க்கு முன்னர் அனுப்பவும். இக்குறிப்புகள் 'இந்து'வில் வெளியிடப்படும்.

★ உங்களுடைய கல்லூரி வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்களைச் சுருக்கமாக எழுதி அனுப்பவும். (தமிழ் அல்லது ஆங்கிலம்) எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை 'இந்து'வில் பிரசுரிக்கப்படும். 20-03-1991க்கு முன்னர் அனுப்பவும்.

★ குறிப்பிட்டளவு பிரதிகளே அச்சடிக்கப்படுவதால் தயவுசெய்து முன்கூட்டியே பதிவு செய்யவும். முன்பதிவுக் கட்டணம்: ரூபா 100/-

எமது அன்பு அன்னையின் வேண்டுகோளாக இந்த அழைப்பினை ஏற்று விடயதானம் செய்யவும்.

நன்றி.

—ஆசிரியர், இந்து
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி.

(B-2073)

---

டுர்...ர்...ர்... டுர்...ர்... ர்... டுர்...

வானிலே ஹெலி ஒன்று ஐம்பது கலிபர் மூலம் மூர்க்கத்தனமாக சன்னங்களை பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தது. மக்களோ இவற்றைக் கண்டு அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. பாதுகாப்பான இடங்களில் அவர்கள் பதுங்கிக்கொண்டார்கள். அன்றாடம் வாழ்க்கையிலே உண்பது, உறங்குவது போன்ற நியதியோடு ஐம்பது கலிபர் தாக்குதல்களையும் சமாளிப்பதில் எம்மக்கள் தங்கள் உள்ளங்களை பக்குவப்படுத்திக் கொண்டதால் பெருமளவு உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

சுன்னாகம் சந்தையில் காது கேளாத நிலையில் நாட்டாண்மைத் தொழில் புரியும் பஞ்சலிங்கம் என்பவனே வலது கால் தொடையின் பின்பக்கத்தில் ஒரு சிராய்ப்புக் காயத்துடன் ஓடிவந்து சிவப்பிரகாசத்தின் கடையோரசலில் பாதுகாப்பிற்காக ஏறிக்கொண்டான். அவன் காலில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்... என்ன கதைகிறான் பார்..? உவங்களுக்கெல்லாம் இயக்கம் ஒன்று இருக்குது என்ற துணிவு தானே...' என தனக்குள்ளேயே திட்டித் தீர்த்தார்.

வானத்திலே வட்டமிட்ட ஹெலியோடு இப்போது அவ்ரோ விமானமும் சேர்ந்து கொண்டது. போராளிகளின் இலக்குகளை மையமாக வைத்து போடப்பட்ட குண்டுகள் அனைத்தும், குடிமக்களின் மனைகளின்மேல் விழுந்து வெடித்துச் சிதறின.

அழிவப்படலத்தை அரைமணி நியாலமாக அரங்கேற்றிய களைப்பில், அவ்ரோ விமானம் பலாலி இராணுவ முகாமை நோக்கிச் சென்றுவிட்டது. அதற்கு பின்பு மக்கள் வெளியே சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள். சிவப்பிரகாசம் அன்று வழக்கமாக விற்கும் பொருட்களுக்கு ஐம்பது சதத்தாலும், ஒரு ரூபாவாலும் கூட்டி விற்குப்படி சுத்தசபிக்கும் சின்னத்தம்பிக்கும் கூறிவிட்டு, வியாபாரத்தில் மும்முரமாய் இருந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



### ஈ. விக்கினராஜா
### "விக்கி"

உருவம் 4 - 12 - 1967 — அருவம் 29 - 11 - 1990

**சபிண்டிகரணம்**

26-2-91 செவ்வாய்க்கிழமை காலை
10-30 மணிக்கு

இனியார் தம் வரவு இன்னமுதாகும்.

15 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். — ஈ. சிவராஜசிங்கன் "இல்லத்தினர்"

(R/1133

---

## பாபு
### (ஐயம்பெருமாள் - ஜெயக்குமார்)

ஜனனம்: 21 - 11 - 1973 — வீரமரணம்: 03 - 09 - 1990

(கோட்டை முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்தார்)

புதைகுழிகள் எழும்பும் — இங்கே
பூகம்பம் வெடிக்கும்
புதுயுகம் மலரும் — இங்கே
புலிக்கொடி பறக்கும்

(R-1129) — குடும்பத்தினர்

---

## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 26

1986ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**பாலா**

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**லெ யிட்** (ம விமலசேகர் - சாஸ்திரி கூளாங்குளம்)

இதே ஆண்டு திருமலையில் பல்வேறு இடங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 12 பொதுமக்கள்

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**லெப் சரத்** (வே. கெவடி - தாளையடி)
**ஜுலியா** (ஆ புலேந்திரன் - முள்ளியவளை)
**சுப்பண்ணா** (மு பரநிருபசிங்கம் - அம்பாறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இவர்கள்
இலட்சியத்தை வென்றெடுக்க
இடைச்சக் குண்டுகள் வீழ்ந்து
பாயும்
இரத்த ஆற்றில் எதிர்நீச்சல் போட்டு
எதிரியைத் தேடிச்சென்று போரிட்டவர்கள்

அடிமைத்தனம் கண்டு
எரிமலையாய் எழுந்தவர்கள்
உரிமைக் கீதத்தை
உதிரத்தால் வரைந்தவர்கள்

மரணித்து வீழ்ந்தாலும்
மானுடமாய் எழுந்தவர்கள்
மக்கள் மனங்களிலே
வாழ்பவர்கள்
வரலாறாய் ஆனவர்கள்;

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2068)

**சிந்தனைக்கு**

அதிகாரம் என்பது, அதன் கடைசி அணு வரை கடமைதான்.

— ஜான் வாட்ஸன்: பாஸ்ட்டர்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 26-02-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 028 - 2839 நிர்வாகபீடம்: 3308

த. பெ. எண். 08

## கல்விப் பணிப்பாளரின் முன்மாதிரி

கடந்த வருடம் நடத்தப்படாமல் பிற்போடப்பட்ட ஆறாம் ஆண்டு புலமைப் பரிசில், க. பொ. த சாதாரண, உயர்தரப் பரீட்சைகளை சிறீலங்கா கல்வி அமைச்சோ, பரீட்சை ஆணையாளரோ நடத்தாவிடில், எமது சக்திக்குட்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையை நாமே நடத்தவேண்டி வரும் என யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கல்விப் பணிப்பாளரின் இம்முடிவு வரவேற்கத்தக்கதும் பாராட்டிற்குரியதும் ஆகும். இம்முடிவின் மூலம் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு விடயத்தை தமிழ் மக்களின் நன்மைகருதி கல்விப்பணிப்பாளர் மேற்கொள்ள முன்வந்துள்ளார்.

யுத்த சூழ்நிலை ஒருபுறம். மறு பகுதிகளில் பாடசாலைகள் இயங்குகின்றன மாணவர்கள் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்கின்றார்கள். பாடங்கள் நடக்கின்றன. வகுப்பேற்றப் பரீட்சைகள், பாடசாலைக்கான அனுமதிப் பரீட்சைகள் என்பன நடைபெறுகின்றன/ பெற்றன. இதேபோன்று ஏனைய அரச தனியார் நிறுவனங்களும் இயன்றளவில் செயற்படுகின்றன. ஆனால் பரீட்சைகளை நடத்துமாறு கல்விப் பணிப்பாளர் கோரியும் சிறிலங்கா அரசாங்கம் நடத்தாமல் இருப்பது திட்டமிட்ட புறக்கணிப்பு நடவடிக்கையாகும்.

இந்நிலையில் கல்விப் பணிப்பாளர் தமிழ் மாணவர்களினதும், பெற்றோர்களினதும் கவலைகளைப் போக்கும் விதத்தில் தனது அதிகாரத்திற்குட்பட்ட வகையில் இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளமை மிகவும் பாராட்டேற்குரியது.

தமிழ் மக்கள் இன்று சகலவிதத்திலும் ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ளனர். இராணுவ, பொருளாதார, கல்வி ஒடுக்குமுறைகளின் மூலம் தமிழ் இனத்தையே அழித்துவிடும் விதத்தில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. இந்நிலையில் தமிழ் அதிகாரிகள் எல்லோரும் தமது அதிகாரத்திற்குட்பட்ட விதத்தில் தமது சேவையைத் தமிழ் மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும்

# நியதியாய்ப் போகும் நிலையில்லாத வாழ்க்கைகள்

அன்று காலை வெளிவந்த தினசரி பத்திரிகையொன்றை புரட்டிப் பார்த்ததும் சிவப்பிரகாசத்திற்கு எரிச்சலாகவும், ஆத்திரமாகவும் இருந்தது. "இவங்கள் மனிசரை நிம்மதியாக வாழவிடமாட்டாங்கள்..." என ரோராவிகளின் அமைப்பொன்றை மனதுக்குள் திட்டிக்கொண்டே, வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து முற்றத்தில் நின்றவாறே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார்.

பேரி விமானங்கள் அன்று வானத்தில் வட்டமிட்டது அவருக்கு மிகுந்த கவலையாக இருந்தது. ஒரு கணம் ஏதோ யோசித்தவராய் வீட்டின் பின்புறம் சென்று பதுங்கு குழிக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சீனி மூடைகள், பால்மா வகைகள், மண்ணெண்ணெய்ப் பரல்கள் எல்லாவற்றையும் பார்த்து பெருமூச்செறிந்து கொண்டார். காலையில் பத்திரிகையில் வெளிவந்த உணவுக் கட்டுப்பாட்டின் விலை விபரப்பட்டியல் அவர் மனதை நன்கு உலுக்கிவிட்டது.

வவுனியாவில் இருந்து கொம்படிப்பாதை ஊடாக வியாபாரிகள் கொண்டுவரும் அத்தியாவசியப்பொருட்களை தனது பேச்சு வல்லமையால் அவர்களை மடக்கி; நாறல் விலைக்கு எல்லாவற்றையும் வாங்கிவைத்துக்கொண்டு, நாட்டின் பிரச்சினைகள் மிகவும் உச்சகட்டத்திற்கு வரும் போது, வாங்கிய விலையிலும் பார்க்க மூன்றுமடங்கு இலாபம் வைத்து விற்று விடுவார் சிவப்பிரகாசம்.

சிறிலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குச் சென்றபோது சிவப்பிரகாசத்தாரும் அவரையொத்த வேறு சில முதலாளிகளும் பெரிதும் கலக்கமடையத் தொடங்கினார்கள். காரணம் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடிந்து, நாடு போரிலிருந்து மீண்டு கொண்டால் தங்களுடைய பதுக்கல் தொழிலும், கொள்ளை லாபமும் பாதிக்கப்பட்டுவிடுமோ ...என அவர்கள் அச்சப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஊரையும் உழைப்பாளிகளின் வியர்வைகளையும் சுரண்டி வாழ்ந்த காரணத்தினால், சிவப்பிரகாசம் இன்று சகலராலும 'முதலாளி' என்ற அடைமொழியால் அழைக்கப்

தார்.

வழக்கம்போல கடையைத் திறந்து சுவாமிப்படங்களுக்கு மலர்களைச் சூடி விளக்கேற்றி கும்பிட்டுவிட்டு தனது கதிரையில் வந்து அமர்ந்துகொண்டார்.

"டேய் சின்னத்தம்பி... வெளியில நிலவரம் என்னமாதிரிக்கிடக்குது...?" என தன் கடையில் விற்பனையாளனாக நிற்கும் அவனை விசாரித்துக் கொள்கிறார்.

"அரிசி முப்பது ரூபாய்க்கு மேலை விற்கவேண்டாம், ... என்று அறிவித்தல் வந்திருக்கு அதனாலை எல்லாரும் யோசித்துக்கொண்டு இருக்கினம்..." என்று கூறிவிட்டு அவன் கடையின் பின்பக்கம் செல்கின்றான். சிவப்பிரகாசத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"முருகா இதென்ன சோதனை?" என்றுமட்டும் அவரது வாய் முணுமுணுத்துக் கொண்டது

**சிறுகதை**

பதுக்கல் முதலாளிமார் படும்பாட்டைக் கண்டுவிட்டு கடையின் பின்பக்கம் சென்ற சின்னத்தம்பிக்கு சிரிப்பு வந்துவிட்டது; தன் சக ஊழியனான கந்தசாமியிடம் விடயத்தைச் சொல்லிச் சிரித்தான் அவன்.

"உங்களுக்கு உது மாத்திரமல்ல இன்னும் வேணும்... மனிசனுக்கு ஒரு மனச்சாட்சி வேண்டாமே. தன்னை இனத் திட்டையே தட்டிப்பறிக்கிறாங்கள் நேத்தெல்லாம் ஒரு மணி சிவந்து எனரை பின்னை

**அலெக்ஸ் பரந்தாமன்**

பொண்டு பிள்ளைப்பெத்திருக்குது. பத்தியம் வைத்துக் குடுக்கிறதுக்கு ஒரு கிலோ அரிசியாவது தாங்கோ... என்று கெஞ்சுமட்டும் கெஞ்சினது. இவன் பொறுக்கிறான் இல்லையெண்டு சொல்லிவிட்டான்"... என்றவாறு தனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை சிவப்

க்குமெழிய தனது நாஇனம், சனம் என்பவற்றின் மீது அக்கறை இராது. நேற்றெல்லாம் எங்கடை வீட்டிற்குப் பக்கத்திலை சாப்பாட்டிற்கு வழியில்லாமல் ஒரு குடும்பம் அலரிக் காயைத் தின்று எல்லாம் செத்துப் போச்சுதுகள். ஆனால் இந்தக் கடைக்குள்ளை ஐம்பது மூடை, அதுவும் முத்துப்போன்ற பூநகரி மொட்டைக்கறுப்பன் அரிசி புழுத்துநாறுது; இப்படியான இரண்டுபட்ட வாழ்க்கைப் போராட்டம் இருக்கும் வரை எமது மண்ணில் நிலைத்து நிற்கும் விடுதலைப்போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை நாம் முன்னெடுத்துச் செல்ல முடியாது..."

சின்னத்தம்பி கூறியதைக் கேட்டு பெருமூச்சு விட்டுக்கொண்டான் கந்தசாமி. நாட்டில் ஒரு பக்கம் பிசாசாத்திரங்களும் மறுபக்கம் 'சிவர்ஸ் சத்தங்களும் இருக்கும் வரையில நமது இனத்துக்குள்ளே ஏற்றதாழ்வுகளும் ஒரு போராட்டமாயே சென்று கொண்டிருக்கும்... என்பதை சின்னத்தம்பி கூறியபதிலில் இருந்து புரிந்து கொண்டான்.

கடையின் முன்பகுதியில் சிவப்பிரகாசத்தார் யாரோடோ பலமாகக் கதைக்கும் சத்தம் கேட்டு இருவரும் கடையின் முன்பகுதிக்கு வந்தார்கள்.

"இப்ப திடீரென அரிசியை விலை குறைக்கச் சொன்னால் நாங்கள் எப்படி வியாபாரம் செய்யிறது...? எங்களை நீரே சொல்லும் பார்ப்பம்..." என்று சிவப்பிரகாசம் தனக்கு முன்னால் இருந்த 'அம்பிகா ஸ்டோர்' முதலாளி அருளம்பலத்தோடு விவாதித்துக்கொண்டிருந்தார்.

"இவங்கள் பொடியள் இப்படித்தானெண்டு போராட்டம் போராட்டம் என்று சனத்தைப் பேய்க்காட்டிக்கொண்டு இருக்கிறாங்கள். எண்பத்திமூண்டு கலவரத்துக்கு முன்னம் சிறிலங்காவின் சிவில் நிர்வாகம் இருக்கேக்கை நாங்கள் என்னமாதிரிச் சீவிச்சம்; வருமானவரிக் கந்தோரிலை இருந்து பெரியவங்கள் வந்தால் ஒருபோத்தில் 'மென்டிஸ்' சாராயத்தோடு விசயத்

ஈழநாதம் ஓராண்டு பூர்த்தி விழாவையொட்டி

உயர்தரப் பரீட்சைகளை சிறிலங்கா கல்வி அமைச்சோ, பரீட்சை ஆணையாளரோ நடத்தாவிடில், எமது சக்திக்குட்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையை நாமே நடத்தவேண்டி வரும் என யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கல்விப் பணிப்பாளரின் இம்முடிவு வரவேற்கத்தக்கதும் பாராட்டற்குரியதும் ஆகும். இம்முடிவின் மூலம் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு விடயத்தை தமிழ் மக்களின் நன்மைகருதி கல்விப்பணிப்பாளர் மேற்கொள்ள முன்வந்துள்ளார்.

யுத்த சூழ்நிலை ஒருபுறம். மறு பகுதிகளில் பாடசாலைகள் இயங்குகின்றன மாணவர்கள் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்கின்றார்கள். பாடங்கள் நடக்கின்றன. வகுப்பேற்றப் பரீட்சைகள், பாடசாலைக்கான அனுமதிப் பரீட்சைகள் என்பன நடைபெறுகின்றன/பெற்றன. இதேபோன்று ஏனைய அரச தனியார் நிறுவனங்களும் இயன்றளவில் செயற்படுகின்றன. ஆனால் பரீட்சைகளை நடத்துமாறு கல்விப் பணிப்பாளர் கோரியும் சிறிலங்கா அரசாங்கம் நடத்தாமல் இருப்பது திட்டமிட்ட புறக்கணிப்பு நடவடிக்கையாகும்.

இந்நிலையில் கல்விப் பணிப்பாளர் தமிழ் மாணவர்களினதும், பெற்றோர்களினதும் கவலைகளைப் போக்கும் விதத்தில் தனது அதிகாரத்திற்குட்பட்ட வகையில் இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளமை மிகவும் பாராட்டற்குரியது.

தமிழ் மக்கள் இன்று சகலவிதத்திலும் ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ளனர். இராணுவ, பொருளாதார, கல்வி ஒடுக்குமுறைகளின் மூலம் தமிழ் இனத்தையே அழித்துவிடும் விதத்தில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. இந்நிலையில் தமிழ் அதிகாரிகள் எல்லோரும் தமது அதிகாரத்திற்குட்பட்ட விதத்தில் தமது சேவையைத் தமிழ் மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும் அல்லது அவர்களை அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தவர்களாகவே கொள்ளவேண்டியுள்ளது.

அதிகாரத் துஷ்பிரயோகம் என்பது தனியாக அதிகாரத்தை மீறிச் செயற்படுவதும், அதிகாரத்தை தவறான வழியில் பயன்படுத்துவதும் மட்டுமல்ல, தமது அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தாமையும் அதிகார துஷ்பிரயோகமே. ஒருவருக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவது தமது அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையில் இருந்து மக்களுக்குத் தமது சேவையை வழங்குவதற்கே. சட்டத்திலுள்ள தடைகளைக் காட்டி மக்களின் சேவையை மறுப்பதற்கல்ல.

அரசாங்கம் மக்களுக்காக உருவானதே ஒழிய அரசாங்கத்திற்காக மக்கள் உருவானவர்கள் அல்ல. அதிகாரிகளும் மக்களுக்காக நியமிக்கப்பட்டவர்களே ஒழிய மக்கள் அதிகாரிகளுக்காக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல அதேவேளை மக்களும் அதிகாரிகளுக்கு தமது கடமையைச் செய்ய ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

க. பொ. த. சாதாரண பரீட்சையை நடத்த முன்வரும் கல்விப் பணிப்பாளருக்கு மாணவர்களும் மக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அப்பொழுதுதான் கல்விப்பணிப்பாளருக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். அவர் தனது முடிவை நிறைவேற்ற ஒத்துழைப்பும் கிடைக்கும். இதேபோன்று ஏனைய அரச அதிகாரிகளுக்கும் தமது அதிகாரத்தின் உச்ச அளவை பயன்படுத்தலாம் என்ற துணிவும் ஏற்படும்.

---

...னைப் பொருட்கள் எல்லாவற்றையும் பார்த்து பெருமூச்செறிந்து கொண்டார். காலையில் பத்திரிகையில் வெளிவந்த உணவுக் கட்டுப்பாட்டின் விலை விபரப்பட்டியல் அவர் மனதை நன்கு உலுக்கி விட்டது.

வவுனியாவில் இருந்து கொம்படிப்பாதை யூடாக வியாபாரிகள் கொண்டுவரும் அத்தியாவசியப்பொருள்களை தனது பேச்சு வல்லமையால் அவர்களை மடக்கி, நூறல் விலைக்கு எல்லாவற்றையும் வாங்கிவைத்துக்கொண்டு, நாட்டில் பிரச்சினைகள் மிகவும் உச்சகட்டத்திற்கு வரும் போது, வாங்கிய விலையிலும் பார்க்க மூன்றுமடங்கு இலாபம் வைத்து விற்று விடுவார் சிவப்பிரகாசம்.

சிறிலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குச் சென்றபோது சிவப்பிரகாசத்தாரும் அவரையொத்த வேறு சில முதலாளிகளும் பெரிதும் கலக்கமடையத் தொடங்கினார்கள். காரணம் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடிந்து, நாடு போரிலிருந்து மீண்டு கொண்டால் தங்களுடைய பதுக்கல் தொழிலும், கொள்ளை லாபமும் பாதிக்கப்பட்டுவிடுமோ ... என அவர்கள் அச்சப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஊரையும் உழைப்பாளிகளின் வியர்வைகளையும் சுரண்டி வாழ்ந்த காரணத்தினால், சிவபிரகாசம் இன்று சகலராலும 'முதலாளி' என்ற அடைமொழியால அழைக்கப்படுவதுமன்றி கன்னாகத்தில் இரண்டு பலசரக்குக் கடையோடு, தாவடியில் ஒரு அரிசி ஆலை, இவற்றைவிட மேலதிகமான தோட்டம் தரவுகளை மற்றும் வீடு வாசல்கள் போன்றவற்றிற்கு அதிபதியாகிவிட்டார்.

தனது பிள்ளைகள் தான் பிறந்த நாட்டில் வாழ்ந்தால், அவர்கள் இதயத்தில் மண்பற்று ஏற்பட்டு, அவர்களது எதிர்காலம் மண்ணோடு போய்விடுமோ.... என அஞ்சிய சிவப்பிரகாசம், வெளிநாடுகளில் வாழும் ஆங்கிலேயர்களுக்கு அடிமைச் சேவகம் செய்வதற்காய் நேரகாலத்தோடு அவர்களை அங்கு அனுப்பி விட்டார்.

வானத்தில் விமானம் ஒன்று இரைந்துகொண்டு செல்கிறது விமானத்தின் சத்தம் கேட்டு பதுங்கு குழியைவிட்டு வெளியே வந்தார் சிவப்பிரகாசம். நிலமெங்கும் வெய்யில் நன்றாக ஏறிக்கொண்டிருந்தது. கன்னாகத்தில் உள்ள தனது பலசரக்குக் கடைக்கு செல்லவேண்டும் என்பதற்காய் உப்பி, பெருத்து ஊழைச்சதையாகிப்போன தனது எண்சாண் உடம்போடு துவிச்சக்கரவண்டியொன்றில் மெதுவாகப் போய்க்கொண்டிருந்...

...

"முருகா இதென்ன சோதனை ?" என்று மட்டும் அவரது வாய் முணுமுணுத்துக் கொண்டது

...டமயிலே சென்று கொண்டிருக்கும... என்பதை சின்னத்தம்பி கூறியபதிலில் இருந்து புரிந்து கொண்டான்.

---

# சிறுகதை

## அலெக்ஸ் பரந்தாமன்

ஈழநாதம் ஓராண்டு பூர்த்தி விழாவையொட்டி நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசுபெற்ற சிறுகதை.

பதுக்கல் முதலாளிமார் படும்பாட்டைக் கண்டுவிட்டு கடையின் பின்பக்கம் சென்ற சின்னத்தம்பிக்கு சிரிப்பு வந்து விட்டது: தன்சக ஊழியனான கந்தசாமியிடம் விடயத்தைச் சொல்லிச் சிரித்தான் அவன்.

"உங்களுக்கு உது மாத்திரமல்ல இன்னும் வேணும்... மனிசனுக்கு ஒரு மனச்சாட்சி வேண்டாமே. தன்ரை இனத்திட்டையே தட்டிப்பறிக்கிறாங்கள் நேற்றெல்லாம் ஒரு மணி சிவந்து என்ரை பிள்ளை பெண்டு பிள்ளைப்பெத்திருக்குது. பத்தியம் வைத்துக்குடுக்கிறதுக்கு ஒரு இரூலா அரிசியாவது தாங்கோ... என்று கெஞ்சுமட்டும் கெஞ்சினது. இவன் பொறுக்கி இல்லையெண்டு சொல்லிவிட்டான்"... என்றவாறு தனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை சிவப்பிரகாசம் மீது திட்டித்தீர்த்தான் கந்தசாமி.

சின்னத்தம்பி அந்த இடத்திலேயே நின்று அரிசிமூட்டை அடுக்கும் அறையினைத் திரும்பிப் பார்க்கிறான் ஐம்பது மூடை பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசி வெளியிலே வராமல் அந்த அறைக்குள்ளே பதுக்கி வைக்கப்பட்டிருப்பது அவன் கண்களில் தென்பட்டது.

"கந்தசாமி எங்கடை மண்ணிலே அதுவும் இப்போதைய போர்க்கால சூழலிலே வாழும் இந்த முதலாளிமாரைப் பற்றி என்ன நினைக்கிறாய்...?" சின்னத்தம்பி கேட்டான்.

"பிழைக்கத் தெரிந்த புண்ணியவான்கள்.." என்று கூறிவிட்டுச் சிரித்தான் கந்தசாமி.

"கந்தசாமி... முதலாளி என்பவன் எந்த இனத்தவனாக இருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும் முதலாளி முதலாளிதான். 'தொழிலாளி தொழில விசுவான் அவனுடைய மனம் பணத்தைப் பெருக்குவதிலேயே குறியாயிரு...

கடையின் முன்பகுதியில் சிவப்பிரகாசத்தார் யாரோடோ பலமாகக் கதைக்கும் சத்தம் கேட்டு இருவரும் கடையின் முன்பகுதிக்கு வந்தார்கள்.

"இப்ப திடீரென அரிசியை விலை குறைக்கச் சொன்னால் நாங்கள் எப்படி வியாபாரம் செய்யிறது...? ஐயா நீங்களே சொல்லுபார்ப்பம்..." என்று சிவப்பிரகாசம் தனக்கு முன்னால் இருந்த 'அம்பிகா ஸ்டோர்' முதலாளி அருளம்பலத்தோடு விவாதித்துக்கொண்டிருந்தார்.

"இவங்கள் பொடியள் இப்படித்தானண்ணை போராட்டம் போராட்டம் என்று சனத்தைப் பேய்க்காட்டிக்கொண்டு இருக்கிறாங்கள். எண்பத்திமூன்று கலவரத்துக்கு முன்னம் சிறிலங்காவின் சிவில் நிர்வாகம் இருக்கேக்கை நாங்கள் என்னமாதிரிச் சீவிச்சம்; வருமானவரிக் கந்தோரில் இருந்து பெரியவங்கள் வந்தால் ஒருபோத்தில் 'மென்டிஸ்' சாராயத்தோடு விசயத்தை முடிச்சுப் போடுவம்; இப்ப பொடியளுக்கு ஐஞ்சு லட்சம் ஆறுலட்சம் என்று குடுத்தாலும், அவங்கள் எங்களோடு ஒத்து வாறாங்கள் இல்லையே.." என சிவப்பிரகாசத்தோடு ஒத்துப்பாடினார் அருளம்பல முதலாளி.

"உலகத்திலை எல்லோரும் ஒரேமாதிரிச் சீவிக்க முடியுமே..? ஒருவனை வருத்தித்தான் இன்னொருவன் வாழ்க்கையிலை முன்னேற முடியும்..." என்று சிவப்பிரகாசத்தார் தனது தொழிலோடு கற்ற அனுபவத்தினை சொல்லிக் காட்டினார்.

சின்னத்தம்பியும் கந்தசாமியும் வேலையில் ஒன்றித்திருப்பதுபோல அவர்களின் உரையாடல்களை அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்;

"கேட்டியே கந்தசாமி-எண்பத்திமூன்றுக்குப்பின்பு பொடியளின்ர இயக்கம் ஒன்று உருவாகி அது நடைமுறையில் இயங்கி வருவதால் தான் நாங்கள் எல்லோரும் உருப்படியாய் இருக்கிறம்;

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக் குடியரசு காவல் படை போர் முனை நோக்கி நகர்வு

பன்னாட்டுப் படையினர் கைப்பற்றிய நிலைகளைத் தாம் மீட்டுக் கைப்பற்றியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது. எதிரிப் படையினர் புறமுதுகிட்டுச் செல்லுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக ஈராக் தனது 62ஆவது இராணுவ அறிக்கையில் கூறியிருக்கிறது.

ஆயிரக்கணக்கான ஈராக் இராணுவத்தினர் வியூகம் அமைத்து வருவதை அடுத்து மிகப்பெருமளவில் ஈராக்கிய இராணுவம் ஒன்று குவிந்து வருவதை நேற்று அமெரிக்க விமானிகள் அவதானித்ததாக றியாட்டிலுள்ள பன்னாட்டுப் படை இராணுவ வட்டாரங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நவீன ஆயுதங்கள் வசம் ஈராக் குடியரசுக் காவல்படையினர் போர் முனை நோக்கி முன்னேறி நகர்வதை வான்வெளி மூலமாகப் பிடிக்கப்பட்ட தெற்கு ஈராக்கியப் புகைப்படங்கள் புலப்படுத்தியுள்ளன. அந்தக் குடியரசுக் காவற்படையினரின் எண்ணிக்கை 50,000 முதல் 70,000 வரை இருக்கலாமென பன்னாட்டுப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பன்னாட்டுப் படையினர் குவைத் தலைநகருக்குள் பிரவேசிக்கத் தயாராக இருப்பதாக சவூதி வானொலி நேற்று அறிவித்தது. ஆனால், இந்தச் செய்தி பற்றி அமெரிக்கத் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

நேற்றுக் காலை ஈராக் இரண்டு ஸ்கட் ஏவுகணைகளை இஸ்ரேலின் மீது ஏவியது. நேற்று பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கக் கப்பல்கள் மீதும் சில்க்வோம் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. பன்னாட்டுப் போர்க் கப்பல் மீது ஈராக் மேற்கொண்ட முதற் தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை ஈராக்கின் குடியரசுக் காவற்படையினர் தமது நிலத்துக்கடியிலான அரண்களைக் கைவிட்டு பன்னாட்டுப் படையை யுத்த முனையில் சந்திப்பதற்கு தெற்கு நோக்கி முன்னேறுவதாக அமெரிக்கத் தரப்பில் கூறப்படுகிறது.

இதுவரை ஈராக் குடியரசுக் காவற்படைகள் தாக்குதலில் இறங்கவில்லையெனவும், அந்தப் படைகள் தாக்குதலில் இறங்கியபின்புதான் தரைப்போரைப் பற்றித் தீர்மானிக்க முடியும் என்றும் ஈராக் அறிவித்துள்ளது.

தமது முதற் தாக்குதலில் இதுவரை 10,000 ஈராக் படைகளைத் தம் யுத்தக் கைதிகளைப் பிடித்திருப்பதாகவும் பன்னாட்டுப் படைகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## இணைப்புக் குழு கூட்டம்

உடுவில் சமநல பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக்குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். இக்கூட்டத்தில் கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாட்டு

எனவும் ப. சிதம்பரம் கோரியுள்ளார்.

தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடன அவசர சட்டத்திற்குப் பதிலாக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதான விவாதத்தை அவர் லோக் சபையில் நேற்றுத் தொடக்கிவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

## பரீட்சைகள்

தமது பிள்ளைகளை வைக்கப் படுத்த வேண்டும் என்றதுடன் 1991இல் ஆண்டு ஒன்பதில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கனிஷ்ட தொழில்நுட்ப ஊராதரப் பரீட்சை ஒன்றினை நடாத்தி சான்றிதழ் வழங்கப்பட இருக்கின்றது. மேற்படி நான்கு பரீட்சைகளும் பரீட்சை ஆணையாளராலேயே நடாத்தப்பட உள்ளன எனவும் பணிப்பாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(லே)

## நியதிவய்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பிரச்சினையென்று பதட்டப்படும் நேரத்தில் பெருமக்களின் நிலைமையைக் கவனித்துக்கொள்ள மாட்டார்கள்... என்பது சிவப்பிரகாசத்தின் வியாபாரத் தந்திரத்தில் ஊறிப்போன ஒரு விடயம்.

நேரம் பிற்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. மக்கள் நடமாட்டம் தெருவிலே குறைந்து விட்டதைக் கண்டார் சிவப்பிரகாசம். கடையைப் பூட்டிவிட்டு அன்றைய வியாபாரப் பணத்தை பக்குவமாக சேட்பொக்கற்றில் வைத்துக்கொண்டு வீடு நோக்கிச் சென்றார்.

அவ்வேளை விமானத்தின் அகோரக் குண்டு வீச்சினால், தாவடியில் உள்ள அவரது இரண்டு மாடி வீடு இடிந்து. மண்ணோடு மண்ணாய் இரண்

# 40 ஆம் நாள் வளைகுடாப் போர்

★ கடந்த 48 மணி நேரச் சண்டையில் 220 ஈராக்கிய தாங்கிகளை அழித்து விட்டதாக அமெரிக்க தரப்பில் கூறிக் கொள்ளப்படுகிறது. அதேவேளை நான்கு அமெரிக்கப் போர் விமானங்கள் காணாமற் போயுள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ "வளைகுடாப்போர் மரணத்தின் விருந்து" எனப் பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

★ 'குவைத்தில் இருந்து ஈராக் விலகி, அங்கு சட்டப்படியான ஆட்சி மீண்டும் ஏற்பட்டு விட்டால் கூட்டுப் படைகள் திரும்பி அடையும்" என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் தெரிவித்துள்ளார்.

★ "வளைகுடாப் போருக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு கிடைத்த நல்லதொரு வாய்ப்பு கை நழுவிப் போயிற்று" என்று சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

★ ஈராக்கை அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகள் சிறுமைப்படுத்தி, அவமானப்படுத்தி விட்டால் ஐ.நா. சபை அமைப்பே சரிந்து போய்விடும் என லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி எச்சரித்துள்ளார்.

★ சவூதி அரேபியா மீது ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. ஆனால் இந்தத் தாக்குதல் பற்றிய விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. அமெரிக்கா தமது பெற்றியாட் ஏவுகணை அதனை வழியிலேயே தாக்கி அழித்து விட்டதாக தெரிவித்துள்ளது.

★ ஈராக்கின் தலைநகரம் பாக்தாத் மீதும் கூட்டுப் படைகள் ராக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டதாக

# 20,000 ஈராக்படைகள் கைது; சவூதி அரேபியா அறிவிப்பு!

(றியாட்)

அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப் படைகள் ஈராக்கிற்குள் நேற்று முன்னேறியுள்ளன. 20,000 ஈராக்கிய இராணுவத்தினர் யுத்தக் கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்டுள்ளார்கள் என்று சவூதி அரேபிய ஜெனரல் காலித் பின் சுல்தான் தெரிவித்துள்ளார்.

14,000 பிரான்சு மற்றும் அமெரிக்க படைகளைக் கொண்ட அணியொன்று வடகிழக்கு நோக்கி தெற்கு ஈராக் பாலைவனப் பிரதேசத்துக்குள் 160 கி.மீ க்கும் கூடுதலாக முன்னேறிச் சென்றுள்ளது என்று அமெரிக்க தரப்பில் சொல்லப்படுகிறது.

சக்திவாய்ந்த அமெரிக்க படைப்பிரிவு ஒன்று ஈராக்கிற்குள் சுமார் 100 கி.மீ முன்னேறிச் சென்றுள்ளதாக றியாட்டிலுள்ள கூட்டுப்படை இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேர்முகப்பரீட்சை; கருத்தரங்கு;

# கொழும்பு அழைக்காதீர்கள் என ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

நேர்முகப்பரீட்சைகள் கருத்தரங்குகள் போன்றவற்றிற்காக வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அதிபர்கள், ஆசிரியர்களை யுத்தம் முடிந்து பாதுகாப்பான போக்குவரத்துச் சூழ்நிலை உருவாகும் வரை கொழும்புக்கு அழையாதீர்களென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அதே சமயம் பல்லாயிரக்கணக்கான பயிலுனர் ஆசிரியர்களை கருத்தரங்கிற்காக கொழும்புக்கு அழைப்பதை விடுத்து கொழும்பிலுள்ள அதிகாரிகளை வடக்கு கிழக்கிற்கு அனுப்பி சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் கருத்தரங்குகளை நடாத்தல் சிறந்தது எனவும் ஆசிரியர் கலாசாலை அனுமதிக்கு வடக்கு கிழக்கில் நேர்முகப் பரீட்சை நடாத்த உத்தரவிட்டது போல் அதிபர் தரம் 3, அதிபர் தரம் 1, 2 இற்கான சேவை மூப்பு அடிப்படையிலான பதவி உயர்வு நேர்முகப் பரீட்சைகளையும் வடக்கு கிழக்கிலே நடாத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை காலை 3 00மணியளவில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் வலிகாமப் பிரிவு அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் சமுகம் தரும்படி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

★

புதிய முறையில் போக்குவரத்து வண்டில்கள், நீர் இறைக்கக்கூடிய சாதனங்கள் போன்றவற்றை உருவாக்கக் கூடிய தகுதியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 28.02.1991 அன்று பி.ப. 3.00 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும். தொழில்நுட்ப, பொறியியலில் அனுபவமுள்ளவர்களும், ஆர்வமுள்ளவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நீதிவிசாரனை

ராஜீவ் காந்தி ஆட்சிக்காலத்திலேயே இந்த ஒட்டுக் கேட்டல் அநேகமாக நிகழ்ந்திருப்பதாக அறிக்கை தெரிவிப்பதனாலேயே சந்திரசேகர் இந்த அறிக்கையை வெளியிடவில்லையென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## பருத்தித்துறையில்

தரும் வாராந்த நிவாரணத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுத்து பட்டினிச் சாவிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு கோரி வலிவடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் சிவமகராஜாவிடம் பாதிக்கப்பட்டவர்கள் மகஜர் ஒன்றை நேற்றுக் கையளித்தனர்.

(ச)

## 6 ஆவது

யில் இருந்து மூன்று நாட்கள் நடைபெறும் இந்த உச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் வழமைபோல் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக கொழும்பில் இந்த மாநாட்டை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அங்குள்ள நிலைமை காரணமாக தடைப்பட்டு வந்தது தெரிந்ததே.

## 40 [illegible]

பட்ட தெற்கு ஈராக்கியப் புகைப்படங்கள் புலப்படுத்தியுள்ளன. அந்தக் குடியரசுக் காவற் படையினரின் எண்ணிக்கை 50,000 முதல் 70,000 வரை இருக்கலாமென பலநாட்டுப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல்நாட்டுப் படையினர் குவைத் தலைநகருக்குள் பிரவேசிக்கத் தயாராக இருப்பதாக சவூதி வானொலி நேற்று

### கூட்டம்

உடுவில் சுமநல பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக்குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். இக்கூட்டத்தில் கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# 40ஆம் நாள் வளைகுடாப் போர்

★ கடந்த 48 மணி நேரச் சண்டையில் 220 ஈராக்கிய தாங்கிகளை அழித்து விட்டதாக அமெரிக்க தரப்பில் கூறிக் கொள்ளப்படுகிறது. அதேவேளை நான்கு அமெரிக்கப்போர் விமானங்களை காணாமல் போயுள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ "வளைகுடாப்போர் மரணத்தின் வித்து" என பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

★ 'குவைத்தில் இருந்து ஈராக் விலகி, அங்கு சட்டப்படியான ஆட்சி மீண்டும் ஏற்பட்டு விட்டால் கூட்டுப் படைகள் திரும்பி அடையும்" என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ்பேகர் தெரிவித்துள்ளார்.

★ "வளைகுடாப் போருக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு கிடைத்த நல்லதொரு வாய்ப்பு கை நழுவிப் போயிற்று" என்று சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

★ ஈராக்கை அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகள் சிறுமைப் படுத்தி, அவமானப் படுத்தி விட்டால் ஐ.நா. சபை அமைப்பே சரிந்து போய்விடும் என லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி எச்சரித்துள்ளார்.

★ சவூதி அரேபியா மீது ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. ஆனால் இந்தத் தாக்குதல் பற்றிய விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. அமெரிக்கா தமது பேற்றியாட் ஏவுகணை அதனை வழியிலேயே தாக்கி அழித்து விட்டதாக தெரிவித்துள்ளது.

★ ஈராக்கின் தலைநகரம் பாக்தாத் மீதும் கூட்டுப் படைகள் ராக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ பைலக்கா தீவினை கூட்டுப்படையினர் இதுவரை கைப்பற்றவில்லை என பி.பி.ஸி. அறிவித்தது. முன்னதாக கூட்டுப் படையினர் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீவினை கைப்பற்றியதாகவும் அங்கு தமது இராணுவத்தினர் நிலை கொண்டிருக்கின்றனர் என்றும் கூறியிருந்தது.

★ குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறிச் செல்வதைக் காட்டிலும் ஈராக்கை அழிப்பதிலேயே தமது குறிக்கோள்களை கூட்டுப்படையினர் காட்டி வருகின்றார்கள் என ஈரானிய ஜனாதிபதி ரப்சஞ்சானி கண்டித்துள்ளார்.

★ ஈரான் தனது இராணுவத்தினரை தயார் நிலையில் வைத்திருக்கிறது என்றும், தனது தயார்நிலை வளைகுடாப் போரில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

★ எகிப்திய இராணுவம் ஈராக்கிய எல்லைக்குள் பிரவேசிக்காது என எகிப்திய ஜனாதிபதி முபாரக் அறிவித்துள்ளார். குவைத்தை ஈராக்கின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்க மட்டுமே எகிப்திய இராணுவத்தினர் உதவியளிப்பார்கள் என்றும் முபாரக் தெரிவித்தார்.

★ துருக்கிய இராணுவத்தினரும் ஈராக்கை தாக்கமாட்டார்கள் என துருக்கிய ஜனாதிபதி துருகுத் ஓசாலும் அறிவித்துள்ளார்.

★ யேமனில் ஆயிரக்கணக்கான மக்கள் ஈராக்கிற்கு ஆதரவான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.

★ ஸ்பெயினில் பலலாயிரக்கணக்கான மக்கள் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இந்த ஊர்வலங்கள் மட்றிட்டிலும், வசிலோனாவிலும் இடம்பெற்றன.

★ 300 ஹெலிகொப்டர்களைக் கொண்ட விமானப்படை அணி ஈராக்கில் உள்ள விநியோகப் பாதைகளை தகர்த்து விட்டதாகப் பிரான்சியப் படைகளுக்கான தளபதி தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு [illegible]

தொடக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

### பரீட்சைகள்

தமது பிள்ளைகளை மக்கப் படிக்க வேண்டும் என்றதுடன் 1991இல் ஆண்டு ஒன்பதில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கனிஷ்ட தொழில்நுட்ப தராதரப் பரீட்சை ஒன்றினை நடாத்தி சான்றிதழ் வழங்கப்பட இருக்கின்றது. மேற்படி நான்கு பரீட்சைகளும் பரீட்சை ஆணையாளராலேயே நடாத்தப்பட உள்ளன எனவும் பணிப்பாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (வோ)

### நியதியாய்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பிரச்சினையென்று பதட்டப்படும் நேரத்தில் பொருட்களின் விலைகளைக் கவனித்துக்கொள்ள மாட்டார்கள்... என்பது சிவப்பிரகாசத்தின் வியாபாரத் தந்திரத்தில் ஊறிப்போன ஒரு விடயம்.

நேரம் பிற்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. மக்கள் நடமாட்டம் தெருவிலே குறைந்து விட்டதைக் கண்டார் சிவப்பிரகாசம். கடையைப் பூட்டிவிட்டு அன்றைய வியாபாரப் பணத்தை பக்குவமாக சேட்பொக்கற்றில் வைத்துக் கொண்டு வீடுநோக்கிச் சென்றார்.

அவ்ரோ விமானத்தின் அகோரக் குண்டு வீச்சினால், தாவடியில் உள்ள அவரது இரண்டு மாடிவீடு இடிந்து, மண்ணோடு மண்ணாய் இரண்டறக்கலந்து கிடந்தது. வீட்டின் அழிவைக் கண்டதும் அதிர்ச்சியால் நெஞ்சை அடைத்துக் கொண்டு விட்டது. கைகளால் நெஞ்சைப் பொத்திக் கொண்டார்.

தெருவிலே போன ஒரு சில மக்கள் இடிந்து விழுந்துபோன அவரது வீட்டை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவருக்கு மூச்சு இழுத்துவிடவே மிகவும் கஷ்டமாக இருந்தது. அதிர்ச்சியினாலும் பயத்தினாலும் அவரது உழைச்சதை இடு... இடுவென ஆடிக்கொண்டிருந்தது. இடிபாடுகளுக்கிடையூடாக வீட்டின் பின்புறம் சென்று பதுங்கு குழியைப் பார்த்த போது... கொள்ளைலாபம் பெறுவதற்காய் பதுக்கிவைக்கப்பட்டிருந்த சீனி மூடைகள், பால்மாவகைகள், மண்ணெண்ணைப் பரல்கள் எல்லாம் ஒன்றாய் சிதறிப் போய்க்கிடந்தன.

"போச்சுதே... போட்ட முதலெல்லாம் போச்சுதே..." என்று கத்தியபடி வாயிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அப்படியே சரிந்து படுத்தவர் வெகுநேரமாகியும் திரும்ப எழுந்திருக்கவில்லை.

தீர்க்கவென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் கோரி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை காலை 9.00 மணியளவில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் வலிகாமப் பிரிவு அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் சமூகம் தரும்படி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

★

புதிய முறையில் போக்குவரத்து வண்டிகள், நீர் இறைக்கக்கூடிய சாதனங்கள் போன்றவற்றை உருவாக்கக் கூடிய தகுதியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 28.02.1991 அன்று பி.ப. 3.00 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும். தொழில்நுட்ப, பொறியியல் அனுபவமுள்ளவர்களும், ஆர்வமுள்ளவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### நீதிவிசாரணை

ராஜீவ் காந்தி ஆட்சிக்காலத்திலேயே இந்த ஒட்டுக் கேட்டல் அநேகமாக நிகழ்ந்திருப்பதாக அறிக்கை தெரிவிப்பதனாலேயே சந்திரசேகர் இந்த அறிக்கையை வெளியிடவில்லையென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### தொற்று நோய்களினால்

இறந்தவர்களில் குழந்தைகளே அதிகம் என்று தெரிவித்தார்.

இந்த நோய்களைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அதனை செயற்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### முஸ்லிம

வேலை கடந்த பதினாறாம் திகதி முஸ்லிம் ஊர்காவற் படையினர் சல்லி என்ற இடத்திற்குள் எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளுடன் புகுந்து தமிழ்ப் பொதுமக்களை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். மறுதினமும் இப்பகுதிக்குள் புகுந்த இவர்கள் சாயநாதன் என்பவரை அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர்.

திருக்கோணமலையில் உள்ள சாம்பல்தீவு கிராமம் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் தொடர்ந்து தாக்கப் பட்டு வருகிறது. திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இவ்வன் செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (மு)

ளர்களின் அனுசரணையுடன் கருத்தரங்குகளை நடாத்த இருந்தது என்றும் ஆசிரியர் கலாசாலை அனுமதிக்கு வடக்கு கிழக்கில் போட்டிப் பரீட்சை நடத்த உத்தரவிட்டது போல் அதிபர் தரம் 3, அதிபர் தரம் 1, 2 இற்கான சேவை மூப்பு அடிப்படையிலான பதவி உயர்வு நேர்முகப் பரீட்சையையும் வடக்கு கிழக்கிலே நடாத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

### பருத்தித்துறையில்

தம் வாராந்த நிவாரணத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுத்து பட்டினிச் சாவிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு கோரி வலிவடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் சிவமகாராஜாவிடம் பாதிக்கப்பட்டவர்கள் மகஜர் ஒன்றை நேற்றுக் கையளித்தனர். (ச)

### 6 ஆவது

யில் இருந்து மூன்று நாட்கள் நடைபெறும் இந்த உச்சி மாநாட்டுத் தீர்மானங்கள் வழமைபோல் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக கொழும்பில் இந்த மாநாட்டை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அங்குள்ள நிலைமை காரணமாக தடைப்பட்டு வந்தது தெரிந்ததே.

### 400 அப்பாவித்

மேலும் நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் வெல்லாவெளி, பாலையடி வெட்டை, மண்டூர் 13, 14 ஆம் கொலனி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் நெடியவெட்டை, பாலையடிவெட்டை, காக்காச்சோலை, மேற்குச்சேனை, அலியாவெட்டை ஆகிய ஊர்களைச் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தி அப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 400 அப்பாவித் தமிழ் இளைஞர்களை கைதுசெய்து மண்டூர் முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

### கிணற்றில்

நகைகளும், அடையாள அட்டையும் அணிந்திருந்த சட்டைக்குள் வைக்கப்பட்டிருந்தன. இவர் சங்கரத்தையைச் சேர்ந்த தவமணி மார்க்கண்டு (வயது 54) என அடையாளம் காணப்பட்டார். இருபாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவரின் கணவர் இரு வருடங்களுக்கு முன்னர் இறந்து விட்டதாகவும் ஏற்கனவே உள்ள 4 பிள்ளைகளும் விவாகம் செய்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.